Absolutely Positively
**Wellington City Council**
Me Heke Ki Pōneke

# நில உரிமையாளர் 'டெ டோய் மஹானா' (சமூக வீட்டுவசதி வழங்குநர்)-ஆக மாற்றப்படுவது பற்றிய குத்தகைதாரருக்கான தகவல் தாள் (ஜூலை 2023)

ஆகஸ்ட் 1, 2023 முதல், புதிய சமூக வீட்டுவசதி வழங்குநரான Te Toi Mahana (டெ டோய் மஹானா) அமைப்பு, உங்கள் வீட்டு உரிமையாளராக மாறும். இந்த மாற்றம் குறித்த சில முக்கியமான தகவல்கள் இங்கே தரப்பட்டுள்ளன:

**எனது வாடகை ஒப்பந்தம் மாற்றமடையுமா?**

இல்லை. உங்கள் குத்தகை ஒப்பந்தமானது, வெலிங்டன் நகர சபையிலிருந்து (Wellington City Council ) டெ டோய் மஹானாவுக்கு (Te Toi Mahana) மாற்றப்படும். உங்களுக்கு அதே வாடகை மற்றும் அதே வாடகை விதிமுறைகள் இருக்கும். இதை சட்டப்பூர்வமாக உறுதிப்படுத்த, நாங்கள் ஜூலை மாதம் உங்களை எழுத்துமூலமாகத் தொடர்புகொள்வோம். நீங்கள் புதிய வாடகை ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட வேண்டியதில்லை. உங்கள் குத்தகை பாதுகாப்பானது.

**ஆகஸ்ட் 1க்குப் பிறகு எனது வாடகையை நான் யாருக்கு செலுத்துவேன்?**

ஆகஸ்ட் 1க்குப் பிறகு, உங்கள் வாடகையை Te Toi Mahana-க்கு நீங்கள் செலுத்த வேண்டும். நீங்கள் தற்போது வாடகையைச் செலுத்திவரும் பெறுநரின் வங்கிக் கணக்கு எண்ணை மாற்றவேண்டியிருக்கும். ஆகஸ்ட் 1க்குப் பிறகு, வாடகையானது பின்வரும் கணக்குக்குச் செலுத்தப்பட வேண்டும்:

Te Toi Mahana account ('டெ டோய் மஹானா' கணக்கு): **01 - 1839 - 0947157 - 02**

**எனது குத்தகைப் பிணைத் தொகைக்கு (bond) என்ன நடக்கும்?**

உங்கள் பிணைத் தொகையானது, சிட்டி ஹவுசிங்கில் (City Housing) இருந்து Te Toi Mahana-க்கு மாற்றப்படும். நீங்கள் எதுவும் செய்ய வேண்டியதில்லை. அனைத்துப் பிணைத் தொகைகளும் Tenancy Services-ஆல் தொடர்ந்தும் பேணப்படும்.

**வாடகை உயர்வு இருக்குமா?**

தற்போதைய வாடகை உயர்வு முடக்கம் (rent freeze) செப்டம்பர் 2023 வரை இருக்கும். அதன் பிறகு ஏற்படும் எந்தவொரு வாடகை மாற்றமும் Te Toi Mahana-இன் முடிவாகும். உங்கள் வாடகை மாற்றப்பட்டால், குறைந்தபட்சம் மூன்று மாத கால அறிவிப்பு உங்களுக்கு வழங்கப்படும்.

**80+ வாடகை உயர்வு முடக்கம் மற்றும் பிற வாடகை அமைப்புகள் தொடர்ந்தும் செயற்பாட்டில் இருக்குமா?**

ஆம். கட்டுபடியாகக்கூடிய வாடகை வரம்பு மானியம் (Affordable Rent Limit subsidy), வாடகை வரம்புகள் மற்றும் 80+ வாடகை உயர்வு முடக்கம் ஆகியவை Te Toi Mahana-க்கு மாற்றப்படும்.

**Te Toi Mahana-ஐ நான் எவ்வாறு தொடர்பு கொள்வது?**

ஆகஸ்ட் 1 முதல் நீங்கள் Te Toi Mahana-வை பின்வருமாறு தொடர்பு கொள்ளலாம்:

| | |
|---|---|
| தொலைபேசி: | 0800 248 944 |
| மின்னஞ்சல்: | info@tetoimahana.org.nz |
| வலைத்தளம்: | www.tetoimahana.org.nz |
| முகவரி: | Te Toi Mahana, DX Mail SP2550, Wellington, 6011 |

**Te Toi Mahana-க்கு மாறுவதால் 'வேலை மற்றும் வருமானத்தை மீறிய செலவுள்ளவர்களுக்கான தங்குமிட மானியங்கள்' (Work and Income Accommodation Supplements) பாதிக்கப்படுமா?**

இல்லை. உங்கள் வீட்டுச் செலவுகளுக்கான சரியான அளவிலான ஆதரவை நீங்கள் பெறுவதை உறுதிப்படுத்த, வேலை மற்றும் வருமானம்/MSD ஆகியவற்றை நீங்கள் புதுப்பிக்கப்பட்ட நிலையில் வைத்திருக்கவேண்டும்.

**மனேர்ஸ் தெருவில் (Manners Street) உள்ள 'வெலிங்டன் சிட்டி கவுன்சில் சேவை மையத்தை' (Wellington City Council Service Centre) என்னால் தொடர்ந்தும் பயன்படுத்த இயலுமா?**

ஆம், மறு அறிவிப்பு வரும் வரை. நீங்கள் உங்கள் வாடகையை Te Toi Mahana-க்கு செலுத்தலாம், வாகனத்தரிப்பு அனுமதியை ஏற்பாடு செய்யலாம், அல்லது வெலிங்டன் நகர சபை சேவை மையத்தில் விசாரிப்புகளை மேற்கொள்ளலாம்.

**வீட்டைப் பராமரிக்க மேற்கொண்ட ஒரு நடவடிக்கையை நான் எப்படிப் பதிவு செய்வது?**

***31 ஜூலை 2023 வரை***

- கவுன்சிலுக்கு 04 499 4444 என்ற எண்ணில் தொலைபேசி அழைப்புவிடுக்கவும் அல்லது
- Wellington.govt.nz/report-a-problem -இல் 'Wellington City Council Fixit' படிவத்தைப் பயன்படுத்தவும், அல்லது
- FIXiT செயலியில் (app) வீட்டைப் பராமரிக்க மேற்கொண்ட ஒரு நடவடிக்கையைப் பதிவு செய்யவும்

***1 ஆகஸ்ட் 2023 முதல்***

- Te Toi Mahana-க்கு தொலைபேசி அழைப்புவிடுக்கவும் அல்லது மின்னஞ்சல் அனுப்பவும், அல்லது
- உங்கள் குத்தகை ஆலோசகருடன் வீட்டைப் பராமரிக்க மேற்கொண்ட ஒரு நடவடிக்கையைப் பற்றிப் பேசவும்.

**யார் எனது வாடகை ஆலோசகராக இருப்பார்?**

பெரும்பாலான 'சிட்டி ஹவுசிங்' (City Housing) ஊழியர்கள், குத்தகை ஆலோசகர்கள், சமூக மேம்பாட்டுக் குழுவினர் மற்றும் இடவசதிகளைப் பராமரிக்கும் குழுவினர் என முன்னர் இருந்ததைப் போன்ற வேலைகளையே Te Toi Mahana-இடம் மேற்கொள்வார்கள். Te Toi Mahana அமைப்பு, ஆகஸ்ட் மாதம் பொறுப்பேற்றவுடன் உங்கள் குத்தகை ஆலோசகரை உறுதிப்படுத்தி, அவரை உங்களுக்கு அறிமுகப்படுத்தும்.

**Te Toi Mahana எப்படி புதிய குத்தகைதாரர்களைத் தேர்ந்தெடுக்கும்?**

வெற்றிடங்கள் ஏற்படும் போது, MSD பொது வீட்டுவசதிப் பதிவேட்டில் இருந்து புதிய குத்தகைதாரர்களை Te Toi Mahana பெற்றுக்கொள்ளும்.

**பெயர்ப்பலகைகள் போன்ற அடையாளங்களைப் புதுப்பிப்பீர்களா?**

ஆம், Te Toi Mahana-ஐப் பிரதிபலிக்கும் வகையில், வீட்டு வளாகங்களிலுள்ள பெயர்ப்பலகைகளைப் புதுப்பிப்போம். வெலிங்டன் நகர சபையின் முத்திரையை அகற்றுவோம். இதை செய்துமுடிக்க சிறிது நேரம் எடுக்கும், எனவே காலப்போக்கில் மாற்றங்களை நீங்கள் கவனிக்கலாம். இதற்கிடையில் உங்கள் வீட்டில் வேலை செய்யும் சில ஒப்பந்ததாரர்கள் கவுன்சில் முத்திரை பதித்த வாகனங்கள் மற்றும் சீருடைகளை வைத்திருக்கக்கூடும்.

**ஆங்கிலம் பேசத் தெரியாத குத்தகைதாரர்களுக்கு என்ன ஆதரவு கிடைக்கிறது?**

உங்கள் மொழியில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தயவு செய்து பின்வருமாறு செய்யுங்கள்:

- கவுன்சிலை 04 499 4444 -இல் அழைத்து, மொழிபெயர்ப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். 60க்கும் மேற்பட்ட மொழிகள் கிடைக்கக்கூடியவாறு உள்ளன
- உங்கள் வாடகை ஆலோசகரிடம் பேசுங்கள், அவரால் மொழி ஆதரவையும் மொழிபெயர்ப்பாளரையும் ஏற்பாடு செய்ய இயலும்
- இந்தத் தகவல் தாளானது, டெ ரியோ மாவோரி, எளிமைப்படுத்தப்பட்ட சீனம், ஸ்பானிஷ், அரபு, பார்சி, சமோவான், தமிழ், ஹிந்தி, கெமர், ரஷ்யன், சோமாலி, மற்றும் பர்மியர் ஆகிய மொழிகளில் கிடைக்கிறது. இது wellington.govt.nz/community-housing-provider என்ற வலைத்தளத்திலும் குத்தகை ஆலோசகர்களிடமிருந்தும் கிடைக்கிறது.

**மேலும் தகவலை நான் எங்கே பெற முடியும்?**

மேலும் தகவல்களை நீங்கள் பின்வரும் முறைகளில் கண்டறியலாம்:

- wellington.govt.nz/community-housing-provider என்ற வலைத்தளத்தில்
- உங்கள் வாடகை ஆலோசகரிடமிருந்து
- நாங்கள் உங்களுக்கு எழுதும் கடிதங்களில்
- குத்தகைதாரருக்கான செய்திமடலில்